2021 செப்டம்பர் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி நா. கயல்விழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, மக்கள் தொகையின் எண்ணிக்கை, அருகிலிருக்கும் சமுதாயக் கூடங்களுக்கு இடையேயுள்ள தூரம் ஆகியவற்றைக் கணக்கில் வைத்துதான் கட்டிக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு வருடமும் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியைக் கொண்டு, அனைத்து மாவட்டங்களுக்கும் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க இயலாது. தேவைப்படும்பட்சத்தில், முன்னுரிமையின் அடிப்படையில் இதைப் பரிசீலனை செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

கொரோனா நோய் தொற்றுக்கான booster dose வழங்குவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறப்புக் கவன ஈர்ப்பு. கொரோனா நோய் தொற்றுக்கான* booster dose *வழங்குவது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எடப்பாடி* K. *பழனிசாமி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், டாக்டர் சி. விஜயபாஸ்கர் ஆகியோர் விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து ஒருவர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா நோய்த் தொற்று தொடங்கிய நாள்முதல்,*

தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கின்ற இந்தக் காலக்கட்டத்தில், கொரோனா தடுப்பூசி என்பது இன்றைக்கு மிக மிக அவசியமான நிலையிலே, தமிழகத்திலே 3½ கோடி பேருக்கு மேலே தடுப்பூசி போடப்பட்டு, தொடர்ந்து 24X7 என்ற அளவிற்குப் போடப்பட்டுக்கொண்டிருந்தது.

முற்பகல் 10–35

இந்த நிலையில், Covaxin and Covishield dose–1, dose–2 இரண்டு doses போட்டு, complete செய்த பின்னர், இதன் immunity validity, அதாவது நோயின் எதிர்ப்பு சக்தி என்பது ஓராண்டுக்காலம் இருக்கும் என்று மருத்துவ வினைஞர்கள், மருத்துவ வல்லுநர்கள் தெரிவித்துக்கொண்டிருக்கின்ற இந்தக் காலக்கட்டத்தில், அமெரிக்காவில் இருக்கக்கூடிய வெள்ளை மாளிகையின் Chief Medical Advisor Dr. Anthony Fauci அவர்கள், இந்த செப்டம்பர் மாதம், 20 ஆம் தேதி likely to start booster dose, இரண்டு dose போட்டுக் கொண்டவர்களுக்கு மூன்றாவது dose, likely to start என்று கூறியிருக்கிறார்கள். உலக சுகாதார மையத்தின் approval இன்னும் பெறப்படவில்லை; பெறுவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருப்பதாகவும், 20 ஆம் தேதி தொடங்கப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் காலக்கட்டத்தில், தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை, இந்த 3–வது dose ஆன booster dose போடுவதற்கு அரசு எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய முயற்சிகள், ஆயத்தப் பணிகள், முன்னேற்பாடுகள், மத்திய அரசினுடைய நிலைப்பாடு போன்ற விளக்கத்தினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் நான் பெற விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவிட் 19 தடுப்பூசி திட்டத்தைப் பொறுத்தவரை, ஒன்றிய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி National Expert Group on Vaccine Administration for Covid-19 குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவைப் பொறுத்தவரையில், அதில் NITI Aayog உறுப்பினர்–தலைவராக இருக்கிறார். ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையின் செயலாளர் துணைத் தலைவராக இருக்கிறார். அந்தக்

2021 செப்டம்பர் 6] [திரு. மா. சுப்பிரமணியன்]

குழுவில் AIIMS-ன் இயக்குநர் அவர்களும், சுகாதாரப் பணிகள் மற்றும் குடும்ப நலத் துறையின் இயக்குநர் அவர்களும், பல்வேறு துறைகளைச் சார்ந்த செயலாளர்களும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அந்த வகையில் இரண்டு dose தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களுக்கு booster dose வழங்குவது குறித்து, National Expert Group on Vaccine Administration for Covid 19 குழு, இதுவரையில் செயல்முறைகள் எதையும் ஒன்றிய அரசிற்கு அளிக்காத நிலையில், மூன்றாவது dose வழங்குவது குறித்தான அந்தத் திட்டத்தை இதுவரை, இந்திய அளவில் எங்கேயும் தொடங்கவில்லை. அதுதான் தமிழகத்தின் நிலைமையும்கூட.

தடுப்பூசியைப் பொறுத்தவரையில், அண்மையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தமிழகத்தின் அனைத்து மக்களுக்கும் விரைந்து தடுப்பூசி செலுத்தியாக வேண்டும் என்கின்ற நிலையில், பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றிய அரசின் அலுவலர்களோடு பேசுவது; ஒன்றிய அரசின் அமைச்சர்களோடு கலந்தாலோசிப்பது; ஒன்றிய அரசின் மாண்புமிகு பிரதமரோடு தொடர்பு கொண்டு பேசுவது; நேரிடையாகச் சென்று கேட்டது; அதோடு எங்களைப் போன்றவர்களை ஒன்றிய அரசிடம் அனுப்பி தொடர்புடைய அமைச்சர்களோடு கலந்தாலோசனை செய்யச் செய்தது; இப்படி பல்வேறு பணிகளைத் தொடர்ந்து செய்யச் சொன்னதன் விளைவு, இன்றைக்கு தமிழகத்திற்குத் தேவையான தடுப்பூசிகள் என்பது, கடந்த ஆகஸ்ட் மாதம் வரை தடையில்லாமல் வந்து கொண்டிருந்தன. இன்னொரு மகிழ்ச்சியான விஷயம்; ஜனவரி மாதம் 16 ஆம் தேதிக்குப் பிறகு இதுவரை தடுப்பூசிகள் பெறப்பட்டதில் நேற்றைக்குத்தான் ஒரே நாளில் கூடுதலாக தமிழகத்திற்கு தடுப்பூசி வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைக்கு ஒரே நாளில் 19,22,080 doses தடுப்பூசிகள் வந்துள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான காரணமும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்தான்.

அண்டை மாநிலமான கேரளாவில், தொடர்ந்து ஒரு நாளுக்கான நோய்த் தொற்றின் எண்ணிக்கை 20,000-க்குக் குறையாமல் ஒரு மாத காலமாக இருந்து கொண்டிருக்கிற நிலையில், அம்மாநிலத்தில் ஏராளமான நடவடிக்கைகளை அவர்கள் எடுத்துக் கொண்டிருந்தாலும்கூட, தொற்றின் எண்ணிக்கை குறையாமல் இருக்கிற நிலையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்

[திரு. மா. சுப்பிரமணியன்] [2021 செப்டம்பர் 6

கேரள–தமிழக மாநிலத்தின் எல்லையோரம் அமைந்திருக்கக்கூடிய மாவட்டங்கள் அனைத்திலும் அனைவருக்கும் தடுப்பூசியை போட்டே தீர வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒரே நாளில் 20 இலட்சம் பேர் என்கிற இலக்கை வைத்து தடுப்பூசி போடும் பணியைச் செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கின்றார்கள். தமிழகத்தில் தடுப்பூசி செலுத்துவது தொடங்கப்பட்ட நாள்முதல் நேற்றைக்கு முன்தினம்தான் வரலாற்றுச் சாதனையாக ஒரே நாளில் 6,20,255 பேருக்கு தடுப்பூசிகள் போடப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒரு சாதனை என்றாலும்கூட, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் இலக்கு ஒரே நாளில் 20 இலட்சத்திற்கும் அதிகமான எண்ணிக்கையில் தடுப்பூசி போட வேண்டுமென்பது. அந்தவகையில் கேரள மாநிலத்தின் எல்லையோர மாவட்டங்களாக இருக்கிற தமிழகத்தைச் சேர்ந்த 9 மாவட்டங்களிலும், அதேபோல் ஏனைய பல்வேறு மாவட்டங்களிலும் வருகிற 12 ஆம் தேதி கூடுதல் முகாம்கள் என்கிற வகையில், ஒரே நாளில் 10,000 முகாம்களை அமைத்து 20 இலட்சம் doses தடுப்பூசிகள் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற இலக்கை நோக்கி இந்தத் துறை பயணித்துக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 10–40

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இந்தத் தடுப்பூசிக்கான நோய் எதிர்ப்புத்திறன் குறித்து, நாங்கள் அண்மையில் டெல்லிக்குச் சென்றிருந்தபோது, அங்கே மருத்துவ வல்லுநர்களிடம் கேட்டபோது, "2 தவணைத் தடுப்பூசி போட்டுக் கொண்டாலே 97.5 சதவிகிதம் நோய் எதிர்ப்பு சக்தி அவர்களுடைய உடலில் உருவாகிறது. எனவே, நிச்சயம் 2 தவணைத் தடுப்பூசிகள் போடப்பட்டதற்குப் பிறகு இறப்பு சதவிகிதமும் சுத்தமாக இல்லாமலிருக்கின்ற நிலை இருந்து கொண்டிருக்கின்றது. 2 தவணைத் தடுப்பூசி போட்டவர்களுக்குக் கொரோனா தொற்று ஏற்படுவதென்பது அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்றாலும், இறப்பு என்பது சுத்தமாக இல்லை" என்கின்ற தகவல் அவர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது.

எனவே, 3 டோஸ் போடுவதற்கான நிலை என்பது தமிழகத்தில் மட்டுமல்ல; இந்தியாவிலும் இல்லை; உலகில் எங்கேயும் இல்லை.

2021 செப்டம்பர் 6] [திரு. மா. சுப்பிரமணியன்]

அப்படி எந்த இடத்திலாவது WHO அங்கீகரிக்கும் என்கின்ற நிலையில் நிச்சயமாக தமிழ்நாடு அரசு அந்தப் பணியினை முதலில் தொடங்கும்.

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

தந்தை பெரியார் பிறந்த நாளை, 'சமூக நீதி நாள்' ஆகக் கொண்டாடுதல் மற்றும் அனைத்து அரசு அலுவலகங்களிலும் உறுதிமொழி எடுத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கையளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முறையாக 1967 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது, 'இந்த ஆட்சியே தந்தை பெரியாருக்கு காணிக்கை' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்தார்கள். ஆறாவது முறை ஆட்சிக்கு வந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு, அந்தப் பகுத்தறிவுப் பகலவனின் அறிவுச்சுடரைப் போற்றும் விதமாக, வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பு ஒன்றை விதி எண் 110–ன்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு, இந்த மாமன்றத்தில் வெளியிடுவது என் வாழ்வில் கிடைத்தற்கரிய நல்வாய்ப்பு என்பதை எண்ணி மகிழ்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"ஈ.வெ. இராமசாமி என்கிற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப்போல் மானமும், அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன். இதைச் செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணிசெய்ய யாரும் வராததினால், நான் அதை மேற்போட்டுக்கொண்டு, தொண்டாற்றி வருகிறேன்" என்று அறிவித்துக்கொண்டு, 95 வயது வரை மூத்திரச் சட்டியைத் தூக்கிக் கொண்டு இந்த இனத்துக்காக, நாட்டுக்காகப் போராடியவர்தான் தந்தை பெரியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)